**தலைப்பு 265 – மன்னார் மாவட்டச் செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மன்னார் மாவட்டச் செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஜூன் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஜூலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான மன்னார் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செலயகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நடைமுறை அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் நிதி அல்லாத சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாண வேலைகளின் பெறுமதியை விட ரூபா 4,609,854 தொகை மிகையாக காசுப்பாய்ச்சல் கூற்றில் அந்தச் செலவுகளின் கூட்டுத்தொகை என காட்டப்பட்டிருந்தது. | ஏற்பட்டிருந்த இந்த வழுவினை அரச கணக்குத் திணைக்களத்துடன் சேர்ந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | காசுப் பாய்ச்சல் கூற்றில் ஏனைய துணைப் பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். |

### 1.6.2 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை மற்றும் நாளதுவரை ஆக்கியிருக்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 454(2) பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணம் 454(2) இன் பிரகாரம் அரசாங்கக் கட்டடங்களில் காணப்படும் அனைத்து மின்சார உபகரணங்கள் தொடர்பாக பொருட் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.2 வழிகாட்டலின் படி குழுவின் செயலாளரினால் தின வரவுப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வழிகாட்டல் 2.11.2 இன் படி தின வரவுப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |
| (இ) | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த சேதம் ஒன்று, நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் ரூபா 150,832 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | சேதத்தினை ஈடுசெய்வதற்கு தாமதமாகிய காரணத்தினால் மொத்தச் சேதத்தினையும் புத்தகங்களுக்கு எடுக்கப்பட்டிருந்தது. | உண்மையான சேதத்தை சரியாக பதிவு செய்ய வேண்டியிருந்தது. |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணி பூர்த்தி செய்யப்பட்டதற்கான அறிக்கை (Completion Report) தயாரித்திருக்காமையால் கூட்டுத்தொகை ரூபா 3,914,565 தொகைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக நிரூபிக்க முடியாதிருந்தது. | தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மிகை வேலைப் பழு தன்மை இதற்கு காரணமாக இருந்தது. | நிதிப் பிரமாணம் 780 இன் படி நடவடிக்கை எடுத்தல். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விண்ணப்பித்திருந்த கட்டுநிதிகள் பெறப்படாமையால் 2019 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 164,916,826 இற்கான 769 செயற்திட்டங்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | 2020 ஆண்டிற்காக கட்டுநிதி பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | முக்கியத்துவத்தினை இனங்கண்டு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டியிருந்தது. |

## 2.2 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 செலவு விடயங்களில் மொத்த தேறிய ஏற்பாடுகளில் ரூபா 9,184,061 இற்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அது அந்த ஏற்பாடுகளில் 7 சதவீதத்திற்கும் 22 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் இருந்தது. | அடுத்த பாதீடு தயாரிக்கும் போது சேமிப்பினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 07 செலவு விடயங்களில் காணப்பட்ட ரூபா 7,026,000 இற்கான ஏற்பாடுகள் ஏனைய 06 செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் உரிய முறையில் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | 05 செலவு விடயங்களின் ஏற்பாடுகள் போதியளவினதாக இன்மையால் 40 சதவீதத்தை மிகைத்த சேமிப்புகள் காணப்பட்ட 07 செலவு விடயங்களில் இருந்து ரூபா 6,875,000 இற்கான ஏற்பாடுகள் மாற்றிக் கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கியிருந்த மூலதன ஏற்பாடுகள் உரிய குறிக்கோள்களுக்காக பயன்படுத்தப்படாமையால் ரூபா 10,734,527 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அவை அந்த ஏற்பாடுகளில் 10 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் இருந்தது. | Covid - 19 தொற்றுநோய் நிலைமை இதற்கு காரணமாக இருந்தது. | ஏற்பாடுகளை செயற்திறனாகப் பயன்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை | | |
| | ரூபா | | | |
| 2006 ஜூலை 14 திகதிய 11/2006 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை | 173,170 | நிறைவேற்று மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரினால் அவர்களுக்கு பொறுப்பாக இல்லாத வாகனங்களுக்காக எரிபொருள் முற்பணம் பெற்றுக்கொண்டிருந்தது. | எதிர் காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனத்தை பயன்படுத்தும் உத்தியோகத்தரினால் எரிபொருள் முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

## 2.8 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 08/2019 இலக்கம் கொண்ட மற்றும் 2019 மார்ச் 27 திகதிய உள்நாட்டு விவகார அமைச்சுச் சுற்றறிக்கைக்கு முரணாக, மாவட்ட செயலாளரினால் 2019 மே மாதம் முதல் 2020 ஆகஸ்ட் மாதம் வரையான காலத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து ரூபா 260,119 தொகை உபசரணைச் செலவுக் கொடுப்பனவு என பெறப்பட்டிருந்தது. | கூட்டங்கள் நடாத்தல் அதிகரித்த காரணத்தினால் மேலதிக செலவுகள் ஏற்பட்டது. | மாதாந்த உபசரணைப் படிக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் உரிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | 11/2006 இலக்கம் கொண்ட மற்றும் 2006 ஜூலை 14 திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3(ix) பிரிவிற்கு இணங்க மாவட்ட செயலாளரினால் 2019 ஜனவரி முதல் 2020 ஆகஸ்ட் மாதம் வரையான காலப் பகுதியில் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு என ரூபா 470,045 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | மாவட்ட செயலாளருக்கு ஒதுக்கிய போக்குவரத்து கொடுப்பனவிற்கு மேலதிகமாக 2019 ஆண்டின் போது நிலவிய சீரற்ற நிலைமை, 2020 ஆண்டில் நிலவிய தொற்றுநோய் நிலைமை, கொழும்பில் நடைபெற்ற மேலதிக கூட்டங்கள் ஆகிய விடயங்களினால் மேலதிக | மேலதிகமாக செலவிடப்பட்டிருந்த தொகை ஒன்று காணப்படின், உத்தியோகத்தரிடம் திருப்பி அறவிடப்பட வேண்டும். |

| | |
|---|---|
| எனினும், அதற்கு மேலதிகமாக மற்றும் அந்த சுற்றறிக்கைக்கு முரணாக, அரசாங்க எரிபொருள் கட்டளைகளின் மூலமும் ரூபா 444,875 இற்கான எரிபொருள் பெறப்பட்டிருந்தது. | எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. |

**2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவை இடைநிறுத்தப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 04 உத்தியோகத்தர்களினால் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 334,572 இற்கான கடன்மீதியை தாபனக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4 ஆம் பந்தியின் படி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிணையாளர்களிடம் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.7 வைப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 1,585,834 தொகைக்கான ஒப்பந்த வேலைகளுக்காக தடுத்து வைக்கப்பட்ட 20 வைப்புக்கள் பொது வைப்புக் கணக்கில் மீதியாக காணப்பட்டது. அதேபோல், 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட வைப்புக் கணக்கு மீதி மற்றும் அத்திகதியில் உள்ளவாறு திறைசேரிப் புத்தகங்களின் படி மீதி இடையே ரூபா 5,375 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | தடுத்து வைத்தல் வைப்புக்கள் திருப்பிச் செலுத்துவதற்கும் அல்லது அரசாங்க வருமானத்திற்கு மாற்றுவதற்கும், கணக்குகளிடையே காணப்படும் வித்தியாசத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணம் 571 இன் படி வைப்புக்கள் தொடர்பாக செயற்படுதல் மற்றும் வைப்பு மீதிகளிடையே இணக்கமின்மைக்கான காரணத்தை விசாரித்து அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | பெறுமதி கூட்டிய வரி செலுத்துவதற்காக பதிவு செய்யப்பட்டிருக்காத ஒப்பந்தக்காரர்களுக்காக அந்த வரி செலுத்த வேண்டும் என கணித்து ரூபா 425,752 இற்கான வரித் தொகை வைப்புக் கணக்கிற்கு | வரிக்காக பதிவு செய்தல் மேற்கொண்டு சமர்ப்பிப்பதற்கு உரிமையாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | பதிவு செய்திருக்காத ஒப்பந்தகாரர்களுக்கு வரி உரிமை காணப்படாமையால் அதனை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| செலவு வைக்கப்பட்டிருந்தது. மிகையான காலம் கடந்திருந்த போதிலும், அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | எடுக்க வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடையப்பெறாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமூர்த்தி உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2019 ஆண்டின் போது 26 நலன் பெறுவோருக்கு கோழிக் கூடுகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,169,870 செலுத்தியிருந்த போதிலும், அந்த நிர்மாண வேலை ஏதும் நிறைவேற்றப்பட்டிருக்காமையால் செலவிடப்பட்ட தொகை பயனற்றதாகியிருந்தது. | தற்போது ஆலோசனை வழங்கப்பட்டு கோழிக் கூடுகள் நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | பௌதீக பரிசோதனை ஒன்றின் பின்னர் வேலை பூர்த்தி செய்தல் அறிக்கை பெற்றுக்கொண்டு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.2 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 10 மில்லியனிற்கான பாதை ஒன்றின் நிர்மாணவேலை 2019 நவம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 மார்ச் மாதம் வரை அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்காக கால நீடிப்பும் கோரியிருக்காமையால் மற்றும் உடன்பட்டவாறு கருமங்கள் நிறைவேற்றப்படாமையால் உடன்படிக்கையை இரத்துச் செய்து செயலாற்றல் பிணை முறியை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு தாமதம் இன்றி தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருந்தது. அதன் காரணத்தினால் அந்த பிணைமுறி ஒப்பந்தக்காரரால் விடுவிக்கப்பட்டிருந்தது. வேலைத் தளத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்த மூலப்பொருட்களுக்காக ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு | இந்த செயற்திட்டம் தொடர்பாக விசாரணைக் குழு ஒன்று நிறுவப்பட்டிருந்தது. குழுவின் அறிக்கையின் படி நடவடிக்கை எடுத்து எதிர்காலத்தில் பதில் வழங்கப்படும். | அரச நிதியங்களுக்கு நட்டமேதும் ஏற்படாதவாறு வகையில் அந்த நிர்மாண வேலைக் கருமங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்திருந்த போதிலும், அவற்றை பாதுகாப்பதற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று காணப்படாமையால் அவை காணாமல் ஆக்கப்பட்டும் மற்றும் அழிவடைந்து கொண்டும் காணப்பட்டது. கைவிடப்பட்ட இந்த செயற்திட்டத்திற்கான செயலாற்றல் பிணைமுறியின் பெறுமதி, மூலப்பொருள் கிரயம் மற்றும் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டவை என கூட்டுத்தொகை ரூபா 1,995,318 இற்கான நட்டமொன்று அரசுக்கு ஏற்பட்டிருந்தது. | | |

3.3 **செயற்திட்டங்கள் பூர்த்தி செய்வதில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மாவட்ட செயலகத்தின் வாகனத் தரிப்பிடம், தகவல் தொழில்நுட்ப வளாகம் மற்றும் மூன்று மாடிக் கட்டடம் நிர்மாணிப்பதற்காக 2020 திசெம்பர் 31 திகதி வரை 03 கட்டங்களின் ரூபா 52,694,249 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 04 வது கட்டத்தில் இரண்டு தடவைகள் கால நீடிப்பு வழங்கப்பட்டு 2021 பெப்ரவரி மாதத்தில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 2,058,715 கிரயத்திற்கான செயற்திட்ட கருமங்கள் பௌதீகப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2021 ஏப்ரல் மாதம் வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மூலதன கருமங்கள் தொடர்பாக மீளாய்வுக் கூட்டத்தின் போது 2021 ஏப்ரல் 22 திகதி வரை கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. தாமத காலத்திற்காக தண்டப்பணம் அறவிடப்படும். | குறிப்பிட்ட காலத்தில் கருமங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தையல் பயிற்சி நிலையம் ஒன்றில் காணப்பட்ட இயந்திரங்கள் காணாமல் போதல் தொடர்பாக 2019 நவம்பர் மாதத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், மன்னார் பிரதேச செயலகத்தினால் அதற்கு எதுவித பதிலும் அனுப்பியிருக்கவில்லை. | இது தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | விசாரணையை விரைவாக பூர்த்தி செய்து பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தொகை ரூபா 1,371,155 தொகைக்கான 49 கொடுப்பனவுகள் இனங்காண முடியாமல் 2015 ஆண்டு முதல் காணப்படுவதுடன், அவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விசாரணையை விரைவாக பூர்த்தி செய்து பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தில் மற்றும் பிரதேச செயலகங்களில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணி வெற்றிடங்கள் 206 காணப்பட்டது. | பதவியணி வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சேவையின் தேவைப்பாட்டினை கவனத்தில் எடுத்து அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் வெற்றிடங்களை நிறப்பிக் கொள்ளல். |